Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 69 of 2025

## Deposition of P.W.1 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராமலிங்கம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணையின் தொடர்ச்சி:**

நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரிவு 183(5) BNSS ன் படி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது அதை வீடியோவில் பதிவு செய்தவுடன், தட்டச்சும் செய்தார்கள். நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் 16.09.2024ம் தேதி சுமார் 9 மணியளவில் எனது பக்கத்து வீட்டுக்காரரான நடராஜ் என்பவர் சம்பவ இடத்திலிருந்து என்னை தொலைபேசியில் அழைத்து தண்ணீர்பந்தல் பேருந்து நிறுத்தத்திற்கு வர சொன்னதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் சம்பவம் அம்மன் லேத் பட்டறைக்கு அருகில் நடந்ததாக நான் சொல்லவில்லை. நான் சொன்ன வீடியோ வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த நேரத்தில் இடத்தில் அங்கிருந்தவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதில் சம்பவத்தின்போது, வக்கீல் சரவணக்குமார் அங்கிருந்ததாக சொல்லவில்லை என்றும், சரவணக்குமார் காரில் காயம்பட்ட மனோஜை ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனேன் என்று சொன்னால் சரியல்ல. நான் டாக்டர் சிவசண்முகத்திடம் சுந்தரராஜ் மனோஜை கையால் நெஞ்சில் குத்தியதையும், காலால்

எட்டி உதைத்ததையும் சொன்னீர்களா என்றால் மனோஜ்க்கும் சுந்தரராஜ்-க்கும் தகராறு ஏற்பட்டு சுந்தரராஜ் மனோஜை கையால் நெஞ்சில் குத்தியதாகவும், காலால் எட்டி உதைத்தாகவும் சொன்னேன். அதை டாக்டர் எழுதி கொள்ளவில்லை. நாமக்கல் எம்.எம். மருத்துவமனையில் காயம்பட்ட நபரின் பெயர் என்ன? அவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டி வந்த நபரின் பெயர் என்ன? காயம்பட்டவருக்கு என்ன நடந்தது? என்று கேட்டார்களா என்று நியாபகம் இல்லை. நான் வீடியோ வாக்குமூலத்தில் காயம்பட்டவரை நேராக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கூட்டி போனதாக சொல்லியிருக்கிறேன் என்றும், அதற்கு முன்பு 2 தனியார் மருத்துவமனைக்கு கூட்டி போனதாக சொல்லவில்லை. நான் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் எம்.எம்.மருத்துவமனைக்கு கூட்டி போனதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல். நான் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு போகவே இல்லை என்றும், அங்கிருந்த மருத்துவர் மனோஜை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக SMS மூலம் குறுஞ்செய்தி அனுப்பினார் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்தின் போது இறந்துபோன மனோஜ் இரும்புக்கம்பியால் சுந்தரராஜின் தலையில் அடிக்க முற்பட்டபோது, சுந்தரராஜ்க்கு வலது கன்னத்திற்கு கீழே காயமாகி விட்டது என்றும், அவரது காலிலும் அடித்து சுந்தரராஜ் கீழே விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேலும், மனோஜ் ஆவேசமாக சுந்தரராஜை அடிக்க முற்பட்ட போது தடுமாறி சுந்தரராஜின் மீது குப்புறக்க விழுந்தார் என்றும், தன்மீது அடிபடாமல் இருக்க சுந்தரராஜ் கையால் தடுத்தார் என்றும், மனோஜ் கீழே சாய்ந்துவிட்டார் என்றும், பின்பு மனோஜ் மீண்டும் எழுந்து உட்கார்ந்துவிட்டு சாய்ந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் முடிந்தவுடன் நான் டாக்டர் சிவசண்முகத்தை அலைபேசியில் தொடர்பு கொண்டு மனோஜிற்கு சிறிய விபத்தில் காயமாகிவிட்டது என்றும், அவரை சிகிச்சைக்காக அழைத்து வரலாமா என்று கேட்டேன் என்றால் மனோஜை சிகிச்சைக்கு அழைத்து வரலாமா என்று மட்டும் தான் கேட்டேன். நான் மனோஜை வக்கீல் சரவணக்குமார் காரில் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போகவில்லை என்றும், ஆட்டோவில் தான் சிவசண்முகம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனோம் என்றால் சரியல்ல. டாக்டர் சிவசண்முகம் மனோஜை பார்த்துவிட்டு விபத்து என்று சொன்னீர்களே? மனோஜ்க்கு காயம் எதுவும் இல்லை என்று கேட்டார் என்றால்

சரியல்ல. நான் உடனே டாக்டரை தனியாக அழைத்து சென்று மனோஜிற்கும் அவரது மைத்துனருக்கும் சிறிய சண்டை ஏற்பட்டது என்றும், நான் கோவிலில் இருந்து வெளியே வரும்போது இரண்டு பேரும் புரண்டு கொண்டார்கள் என்றும், நாங்கள் விலக்கிவிட்ட பிறகு, மனோஜ் எழுந்து உட்கார்ந்து மீண்டும் சாய்ந்துவிட்டார் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவம் முடிந்தவுடன் பிரியா எதிரிகளுடன் காரில் போய்விட்டார். சம்பவத்தன்று இரவு 10 மணிக்கு பிரியா ஜேடர்பாளையம் காவல் நிலையத்தில் வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்து அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திலிருந்து மனோஜின் பிரேத பரிசோதனையை அறிக்கையை வாங்கி மணிமேகலையிடம் கொடுத்தேன். நான் பிரேத பரிசோதனை அறிக்கையை வாங்கிய போது பிரியாவும் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்து எங்கு நிறுத்தினார்கள் என்று சொல்லவில்லை. சம்பவத்தின் போது மனோஜ் 2 முறை கீழே விழுந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது மனோஜ் மது அருந்திவிட்டு குடிபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. மனோஜ் தான் 1வது எதிரி சுந்தரராஜை தாக்கினார் என்றும், நான் உண்மை நிகழ்வுகளை மறைத்து புகார் ஜோடிக்கப்பட்டு அதனடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.2 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சக்திவேல் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணையின் தொடர்ச்சி:**

நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரிவு 183(5) BNSS ன் படி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எனது வீடியோ வாக்குமூலத்தை பதிவு செய்தவுடன் தட்டச்சு செய்தார்கள். போலீசார் பிரேத விசாரணைக்கு பிறகு, நாமக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனது வீடு சம்பவ நடந்த ரோட்டில் கிடையாது. நான் வீடியோ வாக்குமூலத்தில் வீட்டிலிருந்து ரோட்டில் வந்து கொண்டிருந்தேன் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றும், இருசக்கர வாகனத்தில் வந்ததாகவோ, பிரியாவும் மனோஜிம் அம்மன் லேத் பட்டறை அருகே சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் 1,2 எதிரிகள் சம்பவ இடத்திற்கு காரில் வந்ததாகவோ, அவர்கள் மனோஜை கையால் குத்தியதாகவோ, கீழே தள்ளி காலால் உதைத்ததாகவோ, தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, மணிமேகலையின் கன்னத்தில் 2ம் எதிரி அறைந்ததாகவோ, 1ம் எதிரி கீழே கிடந்த கம்பியை எடுத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் 1,2 எதிரிகள் மனோஜை தாக்கிவிட்டார்கள்

என்றும், மனோஜ் கீழே விழுந்துவிட்டார், மனோஜ்க்கு முடியவில்லை என்று நான் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனேன் என்று மட்டும் தான் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் நான் என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வேறு யாரும் வந்ததாகவோ, யாருடைய காரில் ஆஸ்பத்திரிக்கு சென்றோம் என்றோ, சம்பவம் இடத்தில் இருந்தவர்களின் பெயர்களையோ, 2 தனியார் ஆஸ்பத்திரிக்கு போனதாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த வாக்குமூலத்தில் அம்மன் லேத் பட்டறையை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற வாக்குமூலத்தில் தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப் அருகே உள்ள மளிகை கடைக்கு சாமான் வாங்குவதற்காக இரவு 9 மணிக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், இரு சக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் 1,2 எதிரிகள் காரை வந்து நிறுத்தி இறங்கி மனோஜை நோக்கி வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் மனோஜ் கீழே விழுந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த வாக்குமூலத்தில் 1வது எதிரி இரும்பு கம்பியை எடுத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவோ, எம்.எம் ஆஸ்பத்திரிக்கு போனதாகவோ, நாமக்கல் GH க்கு தனியார் ஆம்புலன்ஸ்மூலம் போனதாகவோ, சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் சாட்சிகள் செந்தில்குமார், அய்யம்பெருமாள் மற்றும் நடராஜன் ஆகியோர் இருந்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தில் மனோஜ் இரும்பு கம்பியால் சுந்தரராஜை அடித்து அவருக்கு காயமானது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று இரவு 10 மணிக்கு பிரியா கொடுத்த புகாரின் பேரில் ஜேடர்பாளையம் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சிவசண்முகம் மருத்துவமனையில் என்ன நடந்தது என்று கேட்டு டாக்டர் எழுதிக்கொள்ளவில்லை. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் நான் இல்லவே இல்லை என்றும், சம்பவத்தின் போது என்ன நடந்தது என்று தெரியாது என்றும், மனோஜை நான் ஆஸ்பத்திரிக்கு அழைத்து போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் மனோஜின் பங்காளி என்பதால் என்னை சாட்சியாக சேர்த்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.4 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அய்யம்பெருமாள் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணையின் தொடர்ச்சி:**

நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரிவு 183(5) BNSS ன் படி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவம் முடிந்த பிறகு, மறுநாள் போலீசார் என்னை காலை 10 மணிக்கு தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப் அருகே வைத்து விசாரித்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை வீடியோவாக எடுத்தார்கள். அதை டைப்பும் செய்தார்கள். நான் போலீஸ் வாக்குமூலத்தில் விவசாயம் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றும், வக்கீல் மிட்டாய் கடையில் வேலை செய்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு, எதிரிகளின் பெயர்களோ, இறந்தவரின் பெயரோ, மனோஜின் மனைவி பெயரோ எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வீடியோ வாக்குமூலத்தில் மேற்படி நபர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றும், அம்மன் லேத் பட்டறை அருகே சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்றும், காயம்பட்ட நபரை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்ற நபர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றும், சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் இருந்தவர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேலும், அதே வாக்குமூலத்தில்

காயம்பட்ட நபரை யாரும் கையால் குத்தியதாகவோ, காலால் உதைத்தாகவோ, யார் வாகனத்தில் அவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனார்கள் என்றோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் கோவிலில் குழந்தையை வைத்து கொண்டு காயம்பட்டவரின் மனைவி இருந்தபோது, அங்கு கூட்டமாக பேசி கொண்டிருந்தபோது 2 பேர் காரில் இருந்து இறங்கி ஓடிச்சென்று பையனை அடித்து போட்டார்கள் என்றும், நாங்கள் ஓடுவதற்குள் அடித்து போட்டார்கள் என்றும், பையனுக்கு நினைவு இல்லை என்றும், அவரை தூக்கி காரில் போட்டு ஜேடர்பாளையம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனார்கள் என்றும், ஆஸ்பத்திரிக்கு போவற்குள் உயிர் போனதாக சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நல்லி புட்ஸ் கடைக்கும் அம்மன் லேத் பட்டறைக்கும் இடையே சுமார் 30 அடி தூரம் இருக்கும். நான் வீடியோ வாக்குமூலத்தில் நல்லி புட்ஸ் கடையில் வேலை முடித்துவிட்டு வெளியே வந்து நின்றதாக சொல்லவில்லை என்றும், நல்லி புட்ஸ்க்கு வரசொன்னதால் நான் வந்தேன் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற வாக்குமூலத்தில் 2 நபர்கள் காரில் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லவில்லை என்றும், நல்லி புட்ஸ் மிட்டாய் கடையில் இருந்து சத்தம் கேட்டு வெளியே வந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அப்போது 1,2 எதிரிகளும், மனோஜ் மற்றும் அவரது தாயார் ஆகியோர் சத்தம் போட்டு பேசி கொண்டிருந்தததை பார்த்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் அந்த வாக்குமூலத்தில் மனோஜ் கீழே விழுந்தபிறகு, அவரை யாரும் தாக்கியதாக சொல்லவில்லை என்றும், சம்பவம் அம்மன் லேத் பட்டறை அருகே நடந்ததாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்தின்போது, மனோஜ் கம்பியை எடுத்து 1ம் எதிரி சுந்தரராஜை அடித்தார் என்றால் சரியல்ல. சம்பவதன்று இரவு மனோஜின் மனைவி போலீசில் புகார் கொடுத்து அதன்பேரில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில் இடத்தில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், நான் நல்லிபுட்ஸில் வேலை செய்யவில்லை என்றும், நான் வக்கீலுக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கேட்டு கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.5 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செந்தில்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணையின் தொடர்ச்சி:**

நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரிவு 183(5) BNSS ன் படி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவத்திற்கு மறுநாள் ஆஸ்பத்திரியில் வைத்து எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்களா என்றால் நான் அன்று ஆஸ்பத்திரிக்கே போகவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் காலை 7 மணியளவில் சம்பவ இடத்திற்கு அருகில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம் எடுத்தார்கள். அதை வீடியோவும் எடுத்தார்கள். டைப்பும் செய்தார்கள். சம்பவத்திற்கு முன்பு, எதிரிகளின் பெயர்களும், மனோஜின் மனைவி பெயரும் தெரியாது என்றால் எதிரிகளின் பெயர் தெரியாது. மனோஜின் மனைவி பெயர் தெரியும். நான் வாக்குமூலத்தில் 2 எதிரிகளின் பெயர்களை சொல்லியிருக்கிறேன். ஆனால் வீடியோ வாக்குமூலத்தில் மனோஜின் மனைவி பெயரை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த வாக்குமூலத்தில் ரைஸ் மில்லில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது மனோஜ் அவரது வீட்டுக்காரியை துரத்தி வந்தார் என்றும், குழந்தையை கொடு என்றார் என்றும், அந்த பெண் குழந்தையை கொடுக்கமாட்டேன் என்று சொல்லி அழுது கொண்டே வந்தார் என்றும், நாங்கள் பேசி

அனுப்பிவைத்தோம் என்று சொல்லியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். அதன்பிறகு, அந்த பெண் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்தது என்றும், 2 பேர் காரில் வந்தார்கள் என்றும், மனோஜை துரத்தினார்கள் என்றும், பட்டறை அருகே மனோஜின் மேல் ஏறி உட்கார்ந்து அடித்தார்கள் என்று மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வீடியோ வாக்குமூலத்தில் விலக்கிவிட்டு காரில் ஆஸ்பத்திரிக்கு அழைத்து போனோம் என்றும், போற வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. யார் காரில் ஆஸ்பத்திரிக்கு போனோம் என்றும், யாரெல்லாம் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள் என்றும், 1வது எதிரி கம்பியை எடுத்து மிரட்டினார் என்றோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவம் அம்மன் லேத் பட்டறை அருகே நடந்ததாக சொல்லவில்லை என்றும், மனோஜ் மற்றும் பிரியா பெயர்களை சொல்லவில்லை என்றும், மணிமேகலை மற்றும் அவரது மகன் மற்றும் மருமகன் பேருந்து நிறுத்தத்தின் அருகே பேசி கொண்டிருந்த போது இரண்டு எதிரிகளும் காரில் வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவதன்று இரவு பிரியா போலீசில் புகார் கொடுத்து அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் எனக்கு ரைஸ் மில் இல்லை என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், வழக்கறிஞர் என்னை சாட்சியாக போட சொல்லி அதனடிப்படையில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.6 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. நடராஜன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணையின் தொடர்ச்சி:**

நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரிவு 183(5) BNSS ன் படி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.7 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவத்திற்கு மறுநாள் நாமக்கல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத விசாரணையின் போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள், காலை 10 மணிக்கு மேல் சம்பவ நடந்த இடத்தில் வைத்து என்னை விசாரித்து வீடியோ வாக்குமூலம் பதிவு செய்து கொண்டு அதை டைப் செய்தார்கள் என்றால் சரிதான். நான் மனோஜின் உறவினர். வீடியோ வாக்குமூலத்தில் 1,2 எதிரிகள் மனோஜை தாக்கினார்கள் என்று சொல்லவில்லை. அந்த வாக்குமூலத்தில் மனோஜை 1,2 எதிரிகள் அடிக்க ஓடினார்கள், பின்னாடியே நாங்கள் ஓடினோம், பிறகு விலக்கிவிட்டோம், மனோஜ் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டார் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் மனோஜை நாமக்கல் GH க்கு அழைத்து சென்று அங்கு மனோஜ் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் சம்பவம் அம்மன் லேத் பட்டறைக்கு அருகே நடந்ததாக சொல்லவில்லை என்றும், சம்பவம் இடத்தில் இருந்தவர்களின்

பெயர்களை சொல்லவில்லை என்றும், மணிமேகலையை யாரும் அறைந்ததாகவும் சொல்லவில்லை என்றும், எந்த வாகனத்தில் யாருடைய வாகனத்தில் மனோஜை ஆஸ்பத்திரிக்கு எடுத்து சென்றார்கள் என்றும், என்னுடன் வேறு யாரும் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனோஜின் அம்மா என்னை அழைத்து நான் தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பிற்கு போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற வாக்குமூலத்தில் எம்எம் ஆஸ்பத்திரிக்கு போனதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் டாக்டரிடம் மனோஜை அடித்துவிட்டதாக சொன்னேன். அதை எழுதினார்களா என்று நியாபகம் இல்லை. சம்பவத்தின்போது, மனோஜ் இரும்புகம்பியால் சுந்தரராஜை அடித்து காயமானது என்று சொன்னால் சரியல்ல. சம்பவதன்று இரவு பிரியா போலீசில் புகார் கொடுத்து அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது செல்போனின் சிடிஆர்-ஐ பற்றி என்னிடம் விசாரிக்கவில்லை. மனோஜின் அம்மா சம்பவதன்று இரவு என்னை செல்போனில் கூப்பிடவில்லை என்றும், நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் ஆஸ்பத்திரிக்கு நான் போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், பின்னிட்டு என் வாக்குமூலத்தை ஜோடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியாக சேர்க்கப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.